# தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே பாலம்: இந்தியா - இலங்கை மீண்டும் பேச்சுவார்த்தை




**ராமேசுவரம்:** தனுஷ்கோடி, தலைமன்னார் இடையே பாலம் அமைக்க இந்தியா - இலங்கை இடையே மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கி உள்ளது. இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக ஜூலை 20-ல் புதுடெல்லி வந்தார். பிரதமர் மோடியுடனான அவரது சந்திப்பின் போது தனுஷ்கோடி இலங்கை தலை மன்னார் இடையே பாலம் அமைக்கும் திட்டம் கவனம் பெற்றுள்ளது.

**ஒரே பயணச் சீட்டில் பயணம்:** இந்தியா - இலங்கை இடையே ரயில் மற்றும் கப்பல் என ஒருங்கிணைந்த போக்குவரத்தை ஆங்கிலேயர்கள் தனுஷ்கோடி - இலங்கை தலைமன்னார் இடையே 24.02.1914-ல் தொடங்கினர். இதற்காக பாம்பன் ரயில் பாலமும், தனுஷ்கோடி, தலை மன்னார் துறைமுகங்களும் அமைக்கப்பட்டன.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து தனுஷ்கோடிக்கு ரயில் பயணம், அதைத் தொடர்ந்து தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கு கப்பல் பயணம், மீண்டும் தலைமன்னாரில் இருந்து கொழும்புக்கு ரயில் பயணம் செய்ய ஒரே பயணச்சீட்டு எடுத்தால் போதும். 1964 டிசம்பரில் தனுஷ்கோடியை நிலைகுலையச் செய்த புயலைத் தொடர்ந்து 1965-ல் மீண்டும் ராமேசுவரத்தில் இருந்து இலங்கை தலைமன்னார் இடையே கப்பல் போக்குவரத்து தொடங்கியது.

பின்னர் இலங்கையில் உள்நாட்டு போரால் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. 2015-ம் ஆண்டில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அதிபராக மைத்ரிபால சிறிசேனா, பிரதமராக ரணில் விக்ரமசிங்க வந்ததும் இந்திய அரசு தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்கு கடல் வழியாக பாலம் அமைக்கும் பேச்சுவார்த்தையைத் தொடங்கியது.

மேலும் இந்தப் பாலம் அமைக்க ரூ. 22 ஆயிரம் கோடி நிதியை வழங்க ஆசிய வளர்ச்சி வங்கியும் முன்வந்தது. ஆனால் இத்திட்டத்தில் இலங்கை அரசு அப்போது ஆர்வம் காட்டவில்லை. உலகளாவிய கரோனா பரவலால் 2020 மார்ச்சில் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகித்த சுற்றுலா, தேயிலை உற்பத்தி மற்றும் ஆடை தயாரிப்பு ஆகிய மூன்றும் முற்றிலுமாகப் பாதிப்படைந்தது.

இதனால் இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் அரசுக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் இறங்கினர். அதன்பிறகு பிரதமர் மகிந்த ராஜபக்ச, அதிபர் கோத்தபய ராஜபக்ச அடுத்தடுத்து பதவி விலகி புதிய அதிபராக ரணில் விக்ரமசிங்கவும், பிரதமராக தினேஷ் குணவர்தனவும் பதவி வகித்து வருகின்றனர்.

இலங்கை அரசு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் இலங்கையிலிருந்து தமிழகப் பகுதிகளுக்கு கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து தொடங்க முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. மேலும் தனுஷ்கோடிக்கும் இலங்கையில் உள்ள தலை மன்னாருக்கும் இடையே பாலம் அமைப்பதற்கான திட்டம் குறித்த பேச்சு வார்த்தைகளும் மீண்டும் இலங்கை தரப்பிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது.

கடலில் பாலம் சாத்தியமா?: தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடையே 13 மணல் தீடைகள் உள்ளன. தனுஷ்கோடியிலிருந்து முதல் 6 ஆறு மணல் தீடைகள் இந்தியாவுக்கும், 7-லிருந்து 13-வது தீடை வரை இலங்கைக்கும் சொந்தமானது.

ஒவ்வொரு மணல் தீடையும் குறைந்தது 1 கி.மீ தூரம் கொண்டவை. மேலும் இந்த கடற்பகுதி ஆழம் குறைவானதும் கூட.

இந்தப் பாலம் கடல் மேலும், மணல் தீடைகளிலும் அமையலாம். பிரிட்டனின் போல்ஸ்டோன் நகரில் இருந்து பிரான்சின் கிளாசிஸ் நகருக்கு கடலுக்கு அடியில் சுமார் 50 கி.மீ. தொலைவுக்கு "டன்னல்" எனப்படும் சுரங்கப்பாதை அமைத்து சாலை மற்றும் ரயில் போக்குவரத்து 1994-ம் ஆண்டிலிருந்து நடந்து வருகிறது.

அது போல தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே கடலடியில் சுரங்கப்பாதை அமைக்கவும் முடியும். இந்தப் பாலம் மட்டும் அமைந்தால் நீண்ட கலாச்சார வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இந்தியா - இலங்கை இடையே பயணிகள் போக்குவரத்து, சுற்றுலா மட்டுமின்றி, வர்த்தகமும் மேம்படும். மேலும் சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம், சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம் என்ற பாரதி கண்ட கனவும் நிறைவேறும்

## பக்கிங்ஹாம் கால்வாய் கரையில் நாற்றங்கால் உருவாக்கும் பணி தொடக்கம்




**சென்னை:** அடையாறு பக்கிங்ஹாம் கால்வாய் கரையில் மரக்கன்றுகளுக்கான நாற்றங்கால் உருவாக்கும் பணியை, மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் நேற்று தொடங்கி வைத்தார்.

சென்னை அடையாறு இந்திரா நகர் பகுதியில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய் கரையில் மாநகராட்சியின் அடர்வனக்காடு அமைந்துள்ளது. இப்பகுதியில் சென்னை மாநகராட்சியுடன், சென்னை மிராக்கி ரிட் ரோட்டரி சங்கம் மற்றும் கம்யூனிட்ரீ அமைப்பு ஆகியவை இணைந்து 32,320 மரக்கன்றுகளை வளர்க்கத் திட்டமிடப்பட்டிருந்து.

இதையொட்டி அடையாறு அடர்வனக் காட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மரக்கன்றுகளுக்கான நாற்றங்கால் உருவாக்கும் பணியை, சென்னை மாநகராட்சியின் ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் நேற்று தொடங்கி வைத்தார். இதில் கொய்யா மற்றும் நாட்டு மரக்கன்று விதைகளைக் கொண்டு நாற்றங்கால் உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்த நாற்றங்கால் உருவாக்கும் பணியானது 3 வாரகாலத்தில் முடிவடையும். பின்னர் இச்செடிகள் பசுமையான சுற்றுச்சூழலுக்கும், மக்களுக்கும் பயன்படும் வகையில் மாநகராட்சிப் பகுதிகளில் நடப்பட்டு, பராமரிக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் அப்போலோ மருத்துவமனையின் துணைத் தலைவர் பிரீத்தா ரெட்டி, ரோட்டரி சங்கத்தின் மாவட்ட ஆளுநர் மகாவீர் போத்ரா, ரோட்டேரியன் சிவபாலா ராஜேந்திரன், கம்யூனிட்ரீ அமைப்பின் நிறுவனர் ஹபீஸ்கான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஜி-20 பேரிடர் அபாயத் தணிப்பு பணிக்குழு மாநாடு: சென்னையில் இன்று தொடங்குகிறது



**சென்னை:** ஜி-20 பேரிடர் அபாயத் தணிப்பு பணிக் குழுவின் இறுதிக் கூட்டம் சென்னையில் இன்று (ஜூலை 24) தொடங்கி 2 நாட்கள் நடைபெறுகிறது.

இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா உட்பட 20 நாடுகள் இணைந்து ஜி20 கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன. 2023-ல் ஜி20 கூட்டமைப்புக்கு இந்தியா தலைமையேற்றுள்ளது. இதையொட்டி ஜி-20 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பல்வேறு துறைகளின் பணிக்குழு கூட்டம் நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி கல்வி, நிதி, மகளிர் மேம்பாடு சார்ந்த பணிக்குழு கூட்டம் சென்னையில் நடத்தப்பட்டது. தொடர்ந்து பேரிடர் அபாயத் தணிப்பு பணிக்குழுவின் இறுதி கூட்டம் சென்னையில் இன்றும், நாளையும் (ஜூலை 24, 25) நடைபெறுகிறது.

**5 அம்சங்கள்:** இதுதொடர்பாக தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர்கள் கமல் கிஷோர், சையத் அட்டா ஹஸ்னைன் ஆகியோர் சென்னையில் நிருபர்களிடம் நேற்று கூறியதாவது: பேரிடர் அபாய தணிப்பு குழுவின் முதல்இரு கட்ட கூட்டங்கள் காந்தி நகர் மற்றும் மும்பையில் நடத்தப்பட்டது. தற்போது இறுதிகட்ட கூட்டம் சென்னையில் நடை பெறுகிறது. இதில் துரித முன் னெச்சரிக்கை, பேரிடர்கால நிதி மேம்பாடு, கடல் பேரிடர்கால மீட்பு நடவடிக்கை, பேரிடர்கால மீட்புக்கான உட்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகிய 5 முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படும் மீட்பு நடவடிக்கைகள் குறித்தும் அதுசார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்தும் பகிர்ந்து கொள்ள இந்த கூட்டம் நல்வாய்ப்பாக அமையும். கரோனா காலத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக தமிழகத்தில் சோதனை முறையில் குறுஞ்செய்தி மூலம் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் எச்சரிக்கை வழங்கியது. அதன்படி

**3.5 கோடி குறுஞ்செய்தி:** பொதுமக்களுக்கு 3.5 கோடி குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டன. இதற்கு சிறந்த பலன் இருந்தது. தொடர்ந்து குஜராத்தில் சமீபத்தில் புயல் குறித்து அந்த மாநில மக்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக

எச்சரிக்கை அனுப்பி விபத்துகளை தவிர்த்தோம். மேலும், தமிழகத்தில் 2015-ம் ஆண்டுக்குப் பிறகு வெள்ள மீட்பு நடவடிக்கைகள் சிறப்பாக மேம்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 7 செயற்கைக்கோளுடன் பிஎஸ்எல்வி ராக்கெட் அடுத்த வாரம் விண்ணில் ஏவப்படுகிறது



**சென்னை:** சிங்கப்பூரின் டிஎஸ்-சார் உட்பட 7 செயற்கைக்கோள்களுடன், பிஎஸ்எல்வி சி-56 ராக்கெட் அடுத்த வாரம் விண்ணில் ஏவப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தகவல் தொடர்பு, தொலையுணர்வு மற்றும் வழிகாட்டு செயற்கைக்கோள்களை, இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது. அதனுடன், வணிக ரீதியாகவும் வெளிநாட்டு செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துகிறது.

அதன்படி, சிங்கப்பூருக்குச் சொந்தமான டிஎஸ்-சார் எனும் புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதற்கு இஸ்ரோவின் என்எஸ்ஐஎல் (Newspace India Limited) நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இந்த செயற்கைக்கோளை ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதல் ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி சி-56 ராக்கெட் மூலம் ஜூலை 30-ம் தேதி காலை 6

மணியளவில் விண்ணில் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

இதில், முதன்மை செயற்கைக்கோளான டிஎஸ்-சார் செயற்கைக்கோள் 352 கிலோ எடை கொண்டது. இது சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார் தொழில்நுட்பத்தில் செயல்படக்கூடியது. இரவு, பகல் என அனைத்து பருவநிலையிலும் துல்லியமான படங்களை எடுத்து வழங்கும். இதனுடன் வெலாக்ஸ்-ஏஎம் (23 கிலோ), ஆர்கேட் (24 கிலோ) உட்பட 6 சிறிய செயற்கைக்கோள்களும் விண்ணில் ஏவப்படுகின்றன.

இவை அனைத்தும் தொழில்நுட்ப ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

## கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு நடத்த ஜூலை 26 வரை உச்ச நீதிமன்றம் தடை



இன்று காலையில் கியான்வாபி மசூதியில் ஆய்வு நடத்துவதற்காக வந்த தொல்லியல் துறை அதிகாரிகள்

**புதுடெல்லி:** உத்தரப் பிரதேசம், வாரணாசியில் காசி விஸ்வநாதர் கோயிலை அடுத்து அமைந்துள்ள கியான்வாபி மசூதி வளாகத்தில் தொல்லியல் துறை ஆய்வு நடத்துவதற்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. வாரணாசி நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், அதன் உத்தரவை ஜூலை

26-ம் தேதி (புதன்கிழமை) மாலை வரை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து மனு தாக்கல் செய்ய அவகாசம் கேட்டு மசூதி நிர்வாகம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது, மசூதி நிர்வாகம் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஹுஷிபா அக்மதி, இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்று கேட்டுகொண்டார். அதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு புதன்கிழமை வரை ஆய்வு நடத்துவதற்கு தடை விதித்தது. மேலும், தடை உத்தரவு முடிவதற்குள், தொல்லியல் துறையின் ஆய்வினை எதிர்த்து மசூதி நிர்வாகம் தாக்கல் செய்யும் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்படி அலகாபாத் உயர் நீதிமன்றத்தை உச்ச நீதிமன்ற கேட்டுக்கொண்டது.

முன்னதாக, உத்தரப் பிரதேச அரசு சார்பில் ஆஜரான சொலிசிடர் ஜெனரல் துஷார் மேத்தாவிடம், மசூதி வளாகத்தில் எந்தவித ஆக்கிரமிப்பு வேலையும், ஆய்வும் செய்ய வேண்டாம் என்று தொல்லியல் துறையிடம் தெரிவிக்கும் படி உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.

**காலையில் தொடங்கிய ஆய்வு**: வாரணாசி நீதிமன்றத்தின் ஜூன் 21-ம் தேதி உத்தரவுப்படி, தொல்லியல் துறை திங்கள்கிழமை காலையில் கியான்வாபி மசூதியில் ஆய்வினைத் தொடங்கியது. இதற்காக, மசூதி அமைந்துள்ள சுற்றுவட்டாரப் பகுதிகளில் போலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர். மசூதிக்குள் தொல்லியல் துறை அதிகாரிகள், வழக்கைத் தொடர்ந்த 4 இந்துப் பெண்கள், அவர்களின் வழக்கறிஞர்கள், கியான்வாபி மசூதி நிர்வாகக் குழுவினர் உள்பட 40 பேர் சென்றிருந்தனர்.

**வாரணாசி நீதிமன்றம் தீர்ப்பு:** தொல்லியல் துறையின் ஆய்வு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், வாரணாசி மாவட்ட நீதிபதி ஏ.கே.விஸ்வேஷா பிறப்பித்த உத்தரவில், "வாரணாசியின் கியான்வாபி மசூதியில் இந்திய தொல்லியல் துறை அறிவியல்பூர்வமான கள ஆய்வினை நடத்த வேண்டும். ஒசுகானா பகுதியில்

மட்டும் ஆய்வு நடத்தக்கூடாது. ஆய்வின்போது மசூதிக்கு எவ்வித சேதமும் ஏற்படக்கூடாது. ஆய்வின்போது தொழுகை நடத்தலாம். ஆகஸ்ட் 4-ம் தேதிக்குள் தொல்லியல் துறை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

**வழக்கு பின்னணி:** உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலை ஒட்டி கியான்வாபி மசூதி உள்ளது. மசூதி சுவரில் அமைந்துள்ள சிங்கார கவுரி அம்மனை வழிபட அனுமதி கோரி கடந்த 2021-ல் 5 இந்து பெண்கள் வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இதனை விசாரித்த நீதிமன்றம், கியான்வாபி மசூதியில் களஆய்வு நடத்த உத்தரவிட்டது. இதன்படி மசூதியில் ஆய்வு நடத்தப்பட்டு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் மசூதியின் ஒசுகானாவின் நடுவே சிவலிங்கம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், வாரணாசியில் உள்ள கியான்வாபி மசூதியில் இந்திய தொல்லியல் துறை ஆய்வு நடத்த வேண்டும் என்று கோரி 4 இந்து பெண்கள் சார்பில் வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையில் இந்து பெண்கள் சார்பில் கூறும்போது, "ஆதி விஸ்வேஸ்வரரின் கோயில் மீது கியான்வாபி மசூதி கட்டப்பட்டு உள்ளது. இதை உறுதி செய்ய கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு நடத்த வேண்டும்" என்று வாதிட்டனர்.

கியான்வாபி மசூதி நிர்வாகம் கூறும்போது, "எந்தவொரு வழிபாட்டுத் தலத்தின் மீதும் மசூதி கட்டப்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்கள் ஜூலை 14-ம் தேதி முடிவடைந்தன. இதனைத் தொடர்ந்து இந்த வழக்கில் ஆய்வு நடத்த அனுமதியளித்து ஜூலை 21-ம் தேதி மாவட்ட நீதிமன்றம் உத்தவிட்டது.

## வியட்நாமுக்கு போர்க்கப்பலை வழங்கியது இந்தியா



வியட்நாம் கடற்படைக்கு பரிசாக வழங்கப்பட்ட ஐஎன்எஸ் கிர்பான் போர்க்கப்பல்.

**புதுடெல்லி:** இந்தியா சார்பில் ஐஎன்எஸ் கிர்பான் போர்க்கப்பல், வியட்நாம் கடற்படைக்கு நேற்று முன்தினம் பரிசாக வழங்கப்பட்டது.

தென்கிழக்கு ஆசியாவில் வியட்நாம் நாடு அமைந்துள்ளது. இந்த நாட்டின் வடக்குப் பகுதி சீன எல்லையை ஒட்டி இருக்கிறது. கிழக்குப் பகுதியில் தென் சீனக் கடல் இருக்கிறது. எல்லைப் பகுதி மற்றும் தென் சீனக் கடல் பகுதியில் சீனாவுக்கும் வியட்நாமுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் நீடிக்கிறது.

இதன் காரணமாக கடந்த 1979-ம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையே போர் ஏற்பட்டது. அப்போது வியட்நாமுக்கு ராணுவ ரீதியாக இந்தியா பல்வேறு உதவிகளை வழங்கியது. ஒரு மாதம் நீடித்த போரில் சீனா பெரும் பின்னடைவைச் சந்தித்தது.

இந்த சூழலில் வியட்நாம் கடற்படைக்கு இந்தியா சார்பில் ஐஎன்எஸ் கிர்பான் என்ற போர்க்கப்பல் பரிசாக வழங்கப்பட்டு உள்ளது. கடந்த 1991-ம் ஆண்டில் கிர்பான் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது. 1,450 டன் எடை,90 மீட்டர் நீளம், 10.45 மீட்டர் அகலம் கொண்ட இந்த போர்க்கப்பலில் 12 அதிகாரிகள், 100 மாலுமிகள் பணியாற்றினர். இதில் அதிநவீன ஏவுகணைகள், நாசகார ஆயுதங்கள் பொருத்தப்பட்டு உள்ளன.

வியட்நாமின் கேம் ரான் நகரகடற்படைத் தளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் ஐஎன்எஸ் கிர்பான் போர்க்கப்பலை இந்திய கடற்படைத் தளபதி ஹரிகுமார் வியட்நாம் கடற்படையிடம் ஒப்படைத்தார்.

விழாவில் தளபதி ஹரிகுமார் பேசும்போது, "வியட்நாம் கடல்பகுதி பாதுகாப்பில் புதிய போர்க்கப்பல் முக்கிய பங்கு வகிக்கும். தென்சீனக் கடல் பகுதியில் அமைதி, ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த இந்தியாவும் வியட்நாமும் இணைந்து செயல்பட்டு வருகின்றன'' என்று தெரிவித்தார்.

தென் சீனக் கடலின் பெரும்பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதன்காரணமாக சீனாவுக்கும் வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்கும் இடையே பிரச்சினை நீடிக்கிறது.

இந்த கடல் பகுதியில் சுதந்திரமான கடல் போக்குவரத்தை உறுதி செய்ய அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் அதிதீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. குறிப்பாக அமெரிக்க போர்க்கப்பல்கள் தென் சீனக் கடலில் ரோந்து சுற்றி வருகின்றன. இந்த ரோந்து பணியில் இந்திய கடற்படை போர்க்கப்பல்களும் அண்மையில் இணைந்தன.

## உலகக் கோப்பை மகளிர் கால்பந்து | போர்ச்சுகலை வீழ்த்தியது நெதர்லாந்து



**டுனெடின்:** உலகக் கோப்பை மகளிர் கால்பந்துப் போட்டியின் லீக் ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 1-0 என்ற கோல் கணக்கில் போர்ச்சுகல் அணியை வீழ்த்தியது.

2023-ம் ஆண்டு உலகக் கோப்பை மகளிர் கால்பந்துப் போட்டிகள் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து நாடுகளில் உள்ள மைதானங்களில் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் குரூப் இ பிரிவில் இடம்பெற்றுள்ள நெதர்லாந்து, போர்ச்சுகல் அணிகளிடையிலான லீக் ஆட்டம் நேற்று டுனெடின் நகரில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் நெதர்லாந்து அணி வீராங்கனைகள் சிறப்பாக விளையாடி போர்ச்சுகல் அணியை வீழ்த்தினர். ஆட்டம் தொடங்கியதுமே, விறுவிறுப்பாக விளையாடிய நெதர்லாந்து 13-வது நிமிடத்திலேயே கோலடித்து முன்னிலை பெற்றது.

கார்னர் வாய்ப்பில் கிடைத்த பந்தை, அந்த அணி வீராங்கனை ஸ்டெபாயின் வான் டெர் கிராக்ட் பந்தை தலையால் முட்டி கோல்வலைக்குள் திணித்தார். இதையடுத்து நெதர்லாந்து 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இதைத் தொடர்ந்து, கோல் அடிக்க போர்ச்சுகல் அணி வீராங்கனைகள் முயன்றனர். ஆனால் அதை நெதர்லாந்து வீராங்கனைகள் லாவகமாக தடுத்தனர். இறுதி வரை இந்த நிலை நீடிக்கவே 1-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து அபார வெற்றி பெற்றது.

இதுவரை குரூப் இ பிரிவில் அமெரிக்கா, நெதர்லாந்து அணிகள் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ளன. போர்ச்சுகல், வியட்நாம் அணிகள் தலா ஒரு தோல்வியைச் சந்தித்துள்ளன.

**ஸ்வீடன் அபாரம்:** குரூப் ஜி பிரிவில் நடைபெற்ற மற்றொரு லீக் ஆட்டத்தில் ஸ்வீடன் அணி 2-1 என்ற கோல் கணக்கில் தென் ஆப்பிரிக்கா அணியைத் தோற்கடித்தது.

ஸ்வீடன் தரப்பில் ஃபிரிடோலினா ரோல்போ 65-வது நிமிடத்திலும், அமண்டா லெஸ்டெட் 90-வது நிமிடத்திலும் கோலடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் ஹில்டா மகாயா 48-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

**பிரான்ஸ்-ஜமைக்கா டிரா:** குரூப் எஃப் பிரிவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பிரான்ஸ், ஜமைக்கா அணிகள் மோதின. இந்த ஆட்டம் கோலின்றி டிராவில் முடிந்தது.

## லெபனான் தடகள சாம்பயின்ஷிப் - தங்கம் வென்றார் அன்னு ராணி




லெபனான் தடகள சாம்பயின்ஷிப் பெய்ரூட்டில் நடைபெற்றது. இதில் மகளிருக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் அன்னு ராணி 55.32 மீட்டர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். ஆடவருக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் கிஷோர் ஜென்னா 78.96 மீட்டர் தூரம் எறிந்து தங்கம் வென்றார். மற்றொரு இந்திய வீரரான ஷிவ்பால் சிங் 73.34 மீட்டர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்

## குறு, சிறு, நடுத்தரத் தொழில் துறை சார்பில் சர்வதேச வர்த்தக நிதி சேவை தளம்



**சென்னை:** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் சர்வதேச வர்த்தக நிதி சேவைகள் தளம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் 'ஃபேம்டிஎன்' மற்றும் 'ரிசிவபிள்ஸ் எக்ஸ்சேன்ஜ் ஆஃப் இந்தியா' (ஆர்எக்ஸ்ஜஎல்) நிறுவனம் இயங்குகிறது. இதன்துணை நிறுவனமான 'ஆர்எக்ஸ்ஜஎல் குளோபல் ஜஎஃப்எஸ்சி' உடன் இணைந்து தமிழகத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு தேவையான நிதி தீர்வுகளை வழங்குவதற்காக 'சர்வதேச வர்த்தக நிதி சேவைகள் ஜஎஃப்எஸ்சி' தளம் தொடங்கப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்ச்சியில், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் சிஜிதாமஸ் வைத்யன் மற்றும் ஆர்எக்ஸ்ஜஎல் குளோபல் நிறுவனத்தின் இயக்குநர் கேதன் கெய்க்வாட் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த தளத்தில் நிதிபரிவர்த்தனைகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

சர்வதேச வர்த்தக பரிவர்த்தனைகளுக்கான, பல்வேறு நிதி வசதிகளை இதன் வாயிலாகப் பெறமுடியும். வர்த்தக வரவுகளை ரொக்க நிதியாக மாற்றுவதற்கும், குறுகிய கால நிதியைப் பெறுவதற்கும் இந்த சர்வதேச நிதி சேவை தளம் உதவியாக இருக்கும் என்று தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.